**சீதாவக்க பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீதாவக்க பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சீதாவக்க பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.26 இன் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி கணிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்அப்பெறுமதி ரூபா 18,982,618 ஆக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரரம் பெறுமதி ரூபா 107,669,919 | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

ஆனமையால் காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 88,687,301 இனால் சமப்படாமல் காணப்பட்டது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 20 வருட காலப்பகுதிக்காக நீண்டகால வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணிக்காக செலுத்தப்பட்ட ரூபா 2,000,000 செலவினமாகக் காண்பிப்பதற்குப் பதிலாக காணிக் கணக்கில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் குறைத்துக் காண்பிக்கப்பட்ட பொருத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 595,389 காண்பிக்கப்பட்டமை மீளாய்வாண்டில் சரிசெய்யும் போது பொருத்திக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் பொருத்திகள் ரூபா 96,500 அதிகரித்துப் பதியப்பட்டமை மீளாய்வாண்டில் சரிசெய்யும் போது பொருத்திக் கணக்கு ரூபா 868,500 வரவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக பயன் படுத்தப்பட்ட ரூபா 8,528,450 ஆன ஆயர்வேத இருப்புக்கள் வருமான செலவினக் கணக்கில் சீராக்காமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | இருப்புக் கணக்கில் சீராக்கத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுப்பசளை இருப்பின் பெறுமதி ரூபா 111,100 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,984 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறவேண்டியவைகள் ரூபா 101,116 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | இருப்புப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி ரூபா 109,901 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவ ங்கிக் கடன் வட்டியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன இனங்காணப்படாதிருந்ததுடன் அகற்றியதால் கிடைத்த சகல நிதியும் வருமான செலவினக் கணக்கில் சீராக்கியதன் காரணமாக மிகை ரூபா 148,990 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | நிலையான சொத்துக்களை அகற்றுதல் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட் ரூபா 58,000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 374,350 பெறுமதியான தளபாடங்கள் உரிய சொத்துக்களில் சேர்க்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 432,350 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் ரூபா 1,570,988 பெறுமதியான நடைமுறை வேலைகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலைகள் நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | ஊழியர் பிணை வைப்பு முதலீடு ரூபா 383,232 மற்றும் நகர அபிவிருத்தி நிதிய முதலீடு ரூபா 16,905,537 நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா முதலீட்டில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லா முதலீடுகள் ரூபா 17,288,769 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | முதலீடு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட கேள்வி கடை வாடகை வருமானம் ரூபா 9,055,743 ஆக இருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 9,331,393 ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 275,650 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கடை வாடகை வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,767,407 முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டிய வேலை கடன்பட்டோர் மீதியாகக் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 31,819,630 காண்பிக்கப்பட்டதன் காரணமாக முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டியவைகள் ரூபா 16,052,223 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கடன்பட்டோர் மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (க) | 2023 திசெமபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய வங்கி வட்டி ரூபா 1,704,497 ஆக காண்பிக்க வேண்டியிருந்த | மேற்படி | பெறவேண்டிய வட்டி வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| | போதிலும் ரூபா 663,041 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டியவைகள் ரூபா 1,041,456 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நானாவித வைப்பு மீதி ரூபா 11,678,491 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 13,892,015 ஆனமையால் மீதிகளுக்கு இடையே ரூபா 2,213,524 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கிடையிலான மீதிகளை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற திறைசேரி சுற்றறிக்கை | கொட்டிக்காவத்தை பிரதேச சபையிலிருந்து கிடைக்கப்பெற்ற இலக்கம் 53-4183 என்ற கெப் வண்டி சபையின் பெயரில் கையேற்கப்பட்டிலுக்கவில்லை. | கெப் வண்டி மேல் மாகாண பிரதம செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை சபைக்கு கையளிக்க வேண்டியதாக உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் பிரதம செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கையேற்பத்றகு நடவடிக்கை எடத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,928,217 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 119,570,029 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | ஆதன வரியும் வரியும் | 41,157 | 22,143 | 13,683 | 8,460 | 34,651 | 39,837 | 35,977 | 3,860 |
| (ii) | வாடகை | 39,472 | 30,872 | 30,034 | 838 | 43,300 | 33,031 | 31,924 | 1,107 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,098 | 3,747 | 3,669 | 78 | 3,266 | 2,448 | 2,448 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 286,574 | 268,567 | 268,567 | - | 301,204 | 202,276 | 186,507 | 15,769 |
| | மொத்தம் | **371,301** | **325,329** | **315,953** | **9,376** | **382,421** | **277,592** | **256,856** | **20,736** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவைக் கடை | 2024 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு | வருமானத்தை சேகரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| வாடகை வருமானம் ரூபா 814,123 அறவிடுவதற்கு சபை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 90,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 242,611,559 ஆகும். | கிடைக் வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக பட்டோலைகள் தயாரிக்கப்படுகின்றது. | மேற்படி |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கெப் வண்டி ஒன்றை பழுதுபார்ப்பதற்காக இறுதிப் பட்டியலின் பிரகாரம் ரூபா 4,183,000 கராஜ் இற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து மேவுகை செய்யப்படாத ரூபா 1,318,275 நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை சபை தீர்மானித்திருக்கவில்லை. பரிசோதனை சபை நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய முழுமையான அறிக்கை சமர்பிக்காமல் நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரைத் தீர்மானித்தல் பொதுச் சபைக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறப்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | PE - 6879 கெப் வண்டியை பழுது பார்த்தல் தொடர்பாக மீளளிப்பு செய்யப்படாத நிலுவைப் பணத்தை தீர்த்து வைப்பதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு 2024.03.26 ஆந் திகதி கடிதம் அனுப்பபட்டிருந்த போதிலும் அதன் மூலம் உரிய நிலுவைப் பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 104 இன் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்து செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் | இந்த தொகையை அறவிடுவதற்கோ அல்லது பதிவேடுகளை | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,172,543 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திருத்துவதற்கோ 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 39,669,664 மீதியை தீர்த்து வைப்பதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ரூபா 39,669,664 மீதியை தீர்த்து வைக்கக்கூடிய மீதி 2024.12.31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனைத் தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹங்வெல்ல ஆடு, கோழி இறைச்சிக் கடைகள் 2021 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த வாடகைப்பணம் செலுத்தாமையின் காரணமாக ரூபா 158,137 தொகை சபைக்கு அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அந்த பணத்தை அறவிடுவதற்காக பிரதேச சபைகள் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் அறவிட வேண்டி ரூபா 158,137 தொகையை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சுபை அதிகாரப் பிரதேசத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த 05 காணிக் கூறுகளுக்குரிய அந்த காணிகளின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் 1 சதவீத விற்பனை வரித் தொகையாக ரூபா 2,491,315 கணக்காய்வுத் திகதி வரையான 2023 திசெம்பர் 05 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்தது. அந்த வரித் தொகையை காணி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முன்னர் வருமான பரிசோதகரால் | கணக்காய்வின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் காணி விற்பனை செய்யப்படுகின்ற பெறுமதி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு விற்பனை வரி அறவிடப்படும். | குறித்துரைத்த பிரகாரம் விற்பனை வரியை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதுடன் உண்மையான விற்பனைப் பெறுமதி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | புஸ்செல்லாவ தோட்டத்தில் சாளாவவத்தையில் 01 ஏக்கர் 02 றூட் (ஹெக்டேயர் 0.60702) கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக உப வாடகை செயற்திட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்கு குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக உப வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2023 ஏப்ரல் 26 ஆம் திகதி ரூபா 2,000,000 புஸ்செல்லாவ பெருந்தோட்டக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த காணி அளவை பெற்றுக்கொள்வதற்கான உப வாடகை உடனடபடிக்கையில் சில தவறுகள் சரிசெய்யப்பட்டு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன் பின்னர் உடன்படிக்கையின் பிரதி உங்களுக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை செய்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொஸ்கம டெனி விஜயசுந்தர விளையாட்டு மண்டபத்திற்காக வலைப்பின்னல்படுத்தப்பட்ட தேறிய கணக்கீடு சூரிய வலு முறைமையை ஸ்தாபிப்பதற்காக தனியார் கம்பனிக்கு ரூபா 5,735,000 (வட் இன்றி) பெறுமதிக்கு 2022 திசெம்பர் 13 ஆம் திகதி ஒப்பந்தம் கைளிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்திற்காக ரூபா 5,161,500 தொகை 2023 மே 09 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களுடன் ஒப்பந்தகாரர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் முறைமையுடன் 02 Invertor பொருத்துதல் வேண்டும். எனினும் சூரிய வலு சக்தி அதிகார சபையின் செயற்திட்ட மீளாய்வு உத்தியோகத்தரின் அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம் நடைமுறையில் 20 கிலோ வோட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக 20 கிலோ வோட் Invertor அலகொன்று போதியளவில் இருந்தமையால் ஒரு Invertor மாத்திரம் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மாதிரிகளின் பிரகாரம் 02 இன்வேட்டர் பயன்படுத்த வேண்டியிருந்த போதும் செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது இயலளவுக்கு இணங்குகின்ற 02 இன்வேட்டர் இறக்குமதி செய்தல் பிரச்சினையாக இருந்தமையால் அந்த இயலளவை பெற்றுக் கொள்ளக் கூடிய தனி Invertor ஒன்று பொருத்தப்பட்டள்ளமையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தெளிவுபடுத்தல் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் மாதிரிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பொருத்தப்பட்டிருந்தது. எனினும் 02 Invertor பொருத்தும் அடிப்படையில் உரிய நிறுவனத்திற்கு மேற்கூறப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 இன் பாதீட்டு முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு சுதுவெல்ல சுடலைக்கூட காணியில் மனித உடல்களை வைப்புச் செய்கின்ற நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) ரூபா 11,597,429 (வட் உடன்) மதிப்பீடு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டதன் பின்னர் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு ரூபா 896,624 நிறுத்தி வைத்தல் பணம் 2023 சனவரி 31 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 04 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் இந்த ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்யாமல் கையளிக்கப்பட்டிருந்தமையும் அதன் மிகுதி வேலைப்பகுதிகளை பூர்த்தி செய்யும் வரை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாது விளைவற்றுக் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | வேலை அத்தியட்சகர் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பி உள்ளதுடன் அவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன் பதிலளிக்கப்படும். | உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1(அ) உப பிரிவின் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவுகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் பணிகளுக்காக வேலைகளை அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல், உறுதிப்படுத்துதலுக்கான பெறுகை | மேற்படி | மேற்படி |

நிறுவனம் பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டியிருந்த போதிலும் பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 585,305 ஆன 14 விடயங்களுக்குரிய நிர்மாணங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாததுடன் மேலும் மதிப்பீட்டின் அளவிடைப் பத்திரத்தின் 20 விடயங்களுக்குரிய 90 சதவீதத்திற்கு குறைவாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 1,603,443 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,188,748 வேலை பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகைகும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஹங்வெல்ல நகரத்தில் பழைய வாராந்த சந்தைக் கட்டிடம் சபைக்கு வருமானத்தை உழைக்கக்கூடிய வகையில் வாகனத் தரிப்பிடமாக அபிவிருத்தி செய்து வாகனங்களை நிறுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக சபை நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்கான இலக்கை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் 58 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | பழைய வாராந்த சந்தை சீத்தாவாக்க பிரதேச செயலகத்துக்குரிய ஆதனமாக இருந்தமையால் அதனைப் பிரதேச சபைக்கு சட்டரீதியாக கையளிக்குமாறு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஆதனங்கள் எங்களுக்கு கையளிக்கப்பட்ட பின்னர் வாகனத் தரிப்பிடமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 26 பிரிவுகளில் வீதிகளை அளவிடுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அளவிடல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 23 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சபையினால் எதிர்பார்க்கப்பட்ட நிலையினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | 26 பிரிவுகளுக்குரிய வீதிகளைத் தெரிவு செய்யும் போது மேற்கொள்ளப்பட்ட 26 கோரிக்கைகளில் 06 மாத்திரம் வீதிகள் தொடர்பான கோரிக்கைக் கடிதம் பெறப்பட்டிருந்தது. அந்த கடிதங்கள் தொழில்நுட்ப சேவை குழுவிற்கு அனுப்பி வரைபடம் தயாரிக்கப்படுகின்றது. | அமுலில் உள்ள செயற்திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |